# இஸ்லாத்தில் நீதித் துறையின் பொதுவான அடிப்படைகள்

இறைத்தூதர் ﷺ அவர்கள் மற்றும் அவர்களுக்குப்பின் ஃகலீஃபாக்களுடைய ஆட்சிக்காலம் நீதித்துறையின் பொதுவான அடிப்படைக் கொள்கைகளுக்கான ஒரு மகத்தான, உயர்வான பொற்காலம் என்றே கூறலாம். அதன் சில பிரதிபலிப்புகள் இங்கே குறிப்பிடப்படுகின்றன:

1 **நீதிபதிகள் (ஃகாஜ்தி) இஸ்லாமிய ஷரீஅத் அடிப்படையிலான சட்டங்களுக்குட்பட்டு தீர்ப்பு வழங்கும் கட்டாயத்திலுள்ளவர்கள்**

2 **தீர்ப்பு வழங்குவதில் எல்லைமீறல் மற்றும் அநீதியான முறையில் நடந்துகொள்பவர்கள் அதன் பாதிப்புகளையும் அறிந்துகொள்ள வேண்டும்.** இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

إِنَّ اللَّهَ مَعَ الْقَاضِي مَا لَمْ يَجُرْ، فَإِذَا جَارَ تَخَلَّى عَنْهُ وَلَزِمَهُ الشَّيْطَانُ

*பொருள்: ஒரு நீதிபதி நீதி வழங்குவதில் அத்துமீறல்களைச் செய்யாத வரையில் அல்லாஹ் அவருடன் இருக்கின்றான், அவர் அத்துமீறல்களைக் கடைபிடிக்க ஆரம்பிப்பாரேயானால் ஷைத்தான் அவருடன் இணைந்து விடுகின்றான் (திர்மிதி, அஹ்மத்)*

மேலும், இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

مَنْ طلب قَضاء الْمُسْلِمِينَ حَتَّى يَنَالَهُ، ثُمَّ غلب عَدْلُهُ جَوْرَهُ، فَلَهُ الْجَنَّةُ، ومَنْ غَلَبَ جَوْرُهُ عَدْلَهُ، فَلَهُ النَّارُ

*பொருள்: எவர் ஒருவர் முஸ்லிம்களுடைய காலத்து நீதி வழங்கும் முறையினைக் கோரி அதனைப் பெற்றுவிட்டபின், அந்த நீதி நிலை நாட்டும் முறை அவருக்கெதிராகவே வலுவானதாக ஆகி அவருடைய அநீதியைத் தோற்கடித்துவிட்டால் அவருக்கு சுவர்க்கம் கிடைக்கும், ஆனால், அதே நீதியான முறையின்மீது அவருடைய அநீதியான செயல்கள் மேலோங்கி அதனைத்தோற்கடித்துவிடுமானால் அவருக்கு நரகம்தான்.*

3 **ஒரு நீதிபதி தாம் தீர்ப்பு வழங்குவதில் எவையெல்லாம் தாக்கத்தினை ஏற்படுத்துமோ அவற்றிலிருந்து விலகி இருக்கவேண்டும்** ஆகவே, அவருடைய மனநிலை சீரானதாக இருக்கவேண்டும், அத்துடன் அவர் பசி மற்றும் தாகம், நிம்மதியற்ற நிலை அல்லது கோபத்தில் ஆழ்ந்தவராகவோ இருக்கக்கூடாது, ஏனெனில், இவையனைத்தும் அவர் அளிக்கப்போ

www.uzairfaahi.com

கும் தீர்ப்பில் தாக்கத்தினையும் பாதிப்பையும் ஏற்படுத்த முடியும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

لَا يَحْكُمْ أَحَدُكُمْ بَيْنَ اثْنَيْنِ وَهُوَ غَضْبَانُ

*பொருள்: உங்களில் எவரும் கோபத்தின் சீற்றத்தில் இருக்கும் நிலையில் இரு சாராருக்கிடையே சமரசம் செய்து தீர்ப்பு அளிக்கக்கூடாது (புக்ஹாரி,முஸ்லிம்).*

**4 நீதிபதிகளுக்கு (ஃகாஜ்தி) இலஞ்சம் கொடுப்பதும் மற்றும் நீதிபதிகள் இலஞ்சம் வாங்குவதும் தடுக்கப்பட்டதாகும் (ஹராமாகும்).**

ஒரு குற்றவாளி நீதிபதிக்கு இலஞ்சம் கொடுக்க வந்தால் அவர் அவனுக்கு அதற்கான தண்டனையை வழங்கவேண்டும். ஆகவேதான், இஸ்லாமிய ஷரிஅத் முறையில் செயல்படும் நீதிபதிகள் தாம் எடுக்கும் முடிவுகள் மற்றும் வழங்கும் தீர்ப்புகளில் பாதிப்பு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக ஒரு வழக்கின் வாதி மற்றும் பிரதிவாதிகளில் எவருக்கும் விருந்தளிப்பதுமில்லை, அவர்கள் அளிக்கும் விருந்து அல்லது அன்பளிப்புகளையும் ஏற்றுக்கொள்வதுமில்லை. இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

مَنِ اسْتَعْمَلْنَاهُ عَلَى عَمَلٍ فَرَزَقْنَاهُ رِزْقًا، فَمَا أَخَذَ بَعْدَ ذَلِكَ فَهُوَ غُلُولٌ

*பொருள்: நாம் ஒருவரை ஒரு பணிக்காக நியமித்து அவருக்கு அதற்கான ஊதியத்தையும் வழங்கியபின், அவர்களில் எவரும் அதனைவிட அதிகமாக எடுத்துக்கொள்வரேயானால் அது திருட்டு மற்றும் நம்பிக்கை துரோகமாகும் (அபுதாவூத்).* மேலும், இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

لَعَنَ اللهُ الرَّاشِي وَالمُرْتَشِي

*பொருள்: அல்லாஹ் தஆலா இலஞ்சம் கொடுப்பவர்கள் மற்றும் இலஞ்சம் வாங்குபவர்கள்அனைவரையும் சபிக்கின்றான் (அபுதாவூத், திர்மிதி).*

**5 இரு தரப்பினரையும் தத்தம் வழக்குகள் வாதத்திற்கு வரும்போது பொய் சாட்சிகளைக் கூறுவதிலிருந்து எச்சரிக்கவேண்டும்.**

سُئِلَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ عَنِ الكَبَائِرِ، قَالَ: «الإِشْرَاكُ بِاللَّهِ، وَعُقُوقُ الوَالِدَيْنِ، وَقَتْلُ النَّفْسِ، وَشَهَادَةُ الزُّورِ

www.uzaifalahi.com

***பொருள்:** இறைத்தூதர்ﷺ அவர்கள் பெரிய குற்றங்களைப்பற்றிக் கேட்கப்பட்டபோது கூறினார்கள், அல்லாஹ்வுடன் இணை வைப்பது, பெற்றோர்களுக்கு மாறு செய்வது, ஒரு உயிரை கொல்வது மற்றும் பொய் சாட்சி கூறுவது.*

**6 ஒரு வழக்கு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்போது அதன் உண்மை நிலையைக் கண்டறிய முற்படுவது**

ஒரு நபிமொழியில் கூறப்பட்டுள்ளது:

**جَاءَ رَجُلَانِ مِنَ الْأَنْصَارِ يَخْتَصِمَانِ إِلَى رَسُولِ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ فِي مَوَارِيث بَيْنَهُمَا قَدْ دَرَسَتْ، لَيْسَ عِنْدَهُمَا بَيِّنَةٌ، فَقَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ: «إِنَّكُمْ تَخْتَصِمُونَ إِلَيَّ وَإِنَّمَا أَنَا بَشَرٌ، وَلَعَلَّ بَعْضَكُمْ أَنْ يَكُونَ أَلْحَنَ بِحُجَّتِهِ مِنْ بَعْضٍ، وَإِنَّمَا أَقْضِي بَيْنَكُمْ عَلَى نَحْوٍ مِمَّا أَسْمَعُ، فَمَنْ قَضَيْتُ لَهُ مِنْ حَقِّ أَخِيهِ شَيْئًا فَلَا يَأْخُذْهُ، فَإِنَّمَا أَقْطَعُ لَهُ قِطْعَةً مِنَ النَّارِ يَأْتِي بِهَا إِسْطَامًا فِي عُنُقِهِ يَوْمَ الْقِيَامَةِ» فَبَكَى الرَّجُلَانِ، وَقَالَ كُلٌّ مِنْهُمَا: حَقِّي لِأَخِي، فَقَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ «أَمَّا إِذَا قلتما فاذهبا فاقتسما، ثم توخيا الحق بينكما ثم استهما، ثم ليحلل كل مِنْكُمَا صَاحِبَهُ**

*பொருள்: இரண்டு அன்ஸாரி நபித்தோழர்கள் தங்களுடைய மரபு வழிச்சொத்து விஷயத்தில் ஒரு விவாதத்தைக்கொண்டு இறைத்தூதர் ﷺ அவர்களிடம் வந்தனர். ஆனால், அதனைப்பற்றிய எந்த சாட்சியும் அவர்களிடத்தில் இருக்கவில்லை. இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்: நீங்கள் உங்களுடைய பிரச்சினைக்கான வழக்கை என்னிடத்தில் கொண்டுவந்திருக்கின்றீர்கள். நானும் ஒரு மனிதன் தான், உங்களில் சிலர் மற்றவர்களைவிட எடுத்துரைத்து விவாதிப்பதில் திறமையும் மொழி நயமும் பெற்றிருக்கலாம், நான் நீங்கள் சொல்வதைக் கேட்டு அதன் அடிப்படையில் அவருக்கு சாதகமாவே தீர்ப்பு கூறலாம். ஆகவே, ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள், நான் எவருடைய வாதத்தைக் கேட்டு அவருடைய சகோதரருக்கு உரிய ஒன்றை அவருடைய உரிமையாகக் கருதி தீர்ப்பு கூறினால், நீங்கள் தெரிந்துகொள்ளுங்கள், நான் அவருக்கு நரகத்தின் நெருப்பின் ஒரு துண்டை எடுத்து அவனுக்குக் கொடுத்துள்ளேன், அதனை அவன் மறுமை நாளன்று கட்டித் தொங்கவிட்டுக்கொண்டு வருவான். இதனைக்கேட்டு இருவரும் அழத்துவங்கினர். பின்பு இருவரும் இது என்னுடைய சகோதரருடைய பங்கு ஆகும் என்று கூறலாயினர். இறைத்தூதர் ﷺ அவர்கள்*

www.uzairfalahi.com

கூறினார்கள், அவ்வாறாயின், நீங்கள் சென்று அதனைப் பங்கிட்டுக் கொள்ளுங்கள் மற்றும் நியாயமான முறையில் சீட்டுப்போட்டு ஒவ் வொருவரும் மற்றவரிடமிருந்து அதனைத் தங்களுக்கு ஹலாலான தாக ஆக்கிக்கொள்ளுங்கள்.

இதன் பொருள் யாதெனில், மக்கள் தங்கள் பிரச்சினைகளை ஃகாஜ்தி களிடம் நீதி மன்றத்திற்குக் கொண்டு செல்வார்கள், அவர்கள் தங்க ளுடைய இஜ்திஹாதின் அடிப்படையில் தீர்ப்பளிப்பார்கள். அவர் கள் அந்த விவாதத்தின் உண்மை நிலையினை ஆய்ந்தறிய முடியாதும் போகலாம், இதன் காரணமாக, அவர்கள் அதற்கான உரிமையற்றவ ருக்கே அதனை அளித்துத் தீர்ப்பளிக்கலாம். ஆகவே, இந்நிலையில் நீதிபதியுடைய தீர்ப்பு அந்த மனிதனுக்கு ஆகுமான உரிமையாக ஆகிவிட்டது என்பதல்ல, அவனுக்கு உரிமையே இல்லாத ஒன்றிற்கு உரிமையாளனாக ஆகிவிடுதவற்கு ஆதாரமாகவும் இருக்காது.

## 7 சமரசம் செய்துகொள்வதை நீதி மன்றத்தீர்பபின்மீது முன்னுரிமை அளித்தல்

இதனை இஸ்லாமிய நீதித்துறையின் சிறப்பின் ஆதாரமாகவே கருத வேண்டும், ஏனெனில், நீதி மன்றங்களின் தீர்ப்புகளினால் மக்களி டையே காழ்ப்புணர்ச்சியும் பகைமையும் ஏற்படுகின்றது, இதற்கு மாறாக, சமரச முயற்சிகள் மேற்கொள்ளப்படுமானால் இவ்வாறான அச்சம் இருப்பதில்லை. இதன் காரணமாகவே, இஸ்லாம் சமரசம் செய்துகொள்வதை ஆகுமானதாக ஆக்கியுள்ளது. இவ்வகையில், மக் களிடையே ஷைத்தானுடைய தீய சக்திகளினால் உண்டாக்கப்படும் குழப்பங்களை சமரச முயற்சிகளின் மூலம் சீர்த்திருத்தம் செய்து தீர்வு காணலாம். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

الصُّلْحُ جَائِزٌ بَيْنَ الْمُسْلِمِينَ، إِلَّا صُلْحًا حَرَّمَ حَلَالًا، أَوْ أَحَلَّ حَرَامًا، وَالْمُسْلِمُونَ عَلَى شُرُوطِهِمْ، إِلَّا شَرْطًا حَرَّمَ حَلَالًا، أَوْ أَحَلَّ حَرَامًا

பொருள்: *முஸ்லிம்களின் இரு சாராரிடையே சமரசம் செய்துகொள் வது ஆகுமானதாகும், ஆனால், இந்த சமரசம் ஹராமான ஒன்றை ஹலாலானதாக ஆக்கவோ அல்லது ஹலாலான ஒன்றை ஹராமான தாக ஆக்கவோ இருக்கக்கூடாது.*

ஹஜ்ரத் உமர் பின் க்ஹத்தாப் (ர) அவர்கள் கூறுகிறார்கள்: உங்களுடைய சச்சரவுகளை திரும்பப் பெற்றுவிடுங்கள், மக்கள் சமரச முறையில் அவற் றைத் தீர்த்துக்கொள்ளட்டும. ஏனெனில், நீதிமன்றத் தீர்ப்புகள் மக்க ளிடையே பகைமையும் காழ்ப்புணர்ச்சியும் ஏற்படுத்திவிடுகின்றன.

www.uzarulahi.com

ஒரு (ஃகாஜ்தி) நீதிபதி ஒரு வழக்கின் இரு தரப்பினரில் ஒரு தரப் பினரைப்பற்றி மற்றத் தரப்பினரிடம் பரிந்துரைக்கும் அனுமதி அளித் துள்ளது இஸ்லாத்தின் மகத்துவத்தின் ஒரு சிறப்பம்சமாகும். நபி மொழியில் கூறப்பட்டுள்ளது:

**عَنْ كَعْبٍ، أَنَّهُ تَقَاضَى ابْنَ أَبِي حَدْرَدٍ دَيْنًا كَانَ لَهُ عَلَيْهِ فِي المَسْجِدِ، فَارْتَفَعَتْ أَصْوَاتُهُمَا حَتَّى سَمِعَهَا رَسُولُ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَهُوَ فِي بَيْتِهِ، فَخَرَجَ إِلَيْهِمَا حَتَّى كَشَفَ سِجْفَ حُجْرَتِهِ، فَنَادَى: «يَا كَعْبُ» قَالَ: لَبَّيْكَ يَا رَسُولَ اللَّهِ، قَالَ: «ضَعْ مِنْ دَيْنِكَ هَذَا» وَأَوْمَأَ إِلَيْهِ: أَيِ الشَّطْرَ، قَالَ: لَقَدْ فَعَلْتُ يَا رَسُولَ اللَّهِ، قَالَ: قُمْ فَاقْضِهِ**

பொருள்: ஹஜ்ரத் கஅப் பின் மாலிக் (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள் ஹஜ்ரத் இப்னு அபீ ஹத்ரத் (ர) அவர்கள்மீது தனக்குச் சேரவேண்டிய ஒரு கடன் பாக்கியாக இருந்ததை அவர்கள் இறைத்தூதர் ﷺ அவர்களு டைய மஸ்ஜிதில் திருப்பியளிக்குமாறு கேட்டார்கள். அவர்களுக்கிடை யிலான இந்த விவாதம் வளர்ந்து அவர்களுடைய கூச்சல் அதிகமா யிற்று, அதனை இறைத்தூதர் ﷺ அவர்களும் அவர்கள் தம்முடைய அறையில் இருந்தபோதிலும் கேட்டுக்கொண்டார்கள். இறைத்தூதர் ﷺ அவர்கள் அவர்களுக்கு நெருங்கி வந்தார்கள், தன்னுடைய அறை யின் திரையினையும் நீக்கியவாறு ஹஜ்ரத் கஅப் பின் மாலிக் (ர) அவர்களை அழைத்தார்கள், கஅப் அவர்களே, அவர்கள் (ர) பதிலளித் தார்கள், லப்பைக் இறைத்தூதர் ﷺ அவர்களே, இறைத்தூதர் ﷺ அவர்கள் சைகை செய்து காட்டினார்கள், உங்களுடைய கடன் தொகை யில் பாதியினை மன்னித்து விட்டுவிடுங்கள், நான் அதனை மன்னித்து விட்டேன். அப்போது இறைத்தூதர் ﷺ அவர்கள் ஹஜ்ரத் இப்னு அபீ ஹத்ரத் (ர) அவர்களை நோக்கிக் கூறினார்கள், எழுந்திருங்கள், மித முள்ள கடனை அடைத்துவிடுங்கள் (புக்ஹாரி, முஸ்லிம்).

* * *

www.uzairfalahi.com